வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 1 of 2023

வழக்கு சாட்சி – PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சந்துரு | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவம் | தொழில் | : | Diploma 2 ஆம் ஆண்டு படிக்கிறேன் |
| கிராமம் | : | திருவள்ளுவர் நகர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 20 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01.02.2024.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 01.02.2024

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு Diploma 2 ஆம் ஆண்டு படித்து வருகிறேன். அ.சா.6 நந்தகுமாரை எனக்கு தெரியும். கடந்த 18.09.2022 ஆம் தேதி மதியம் 2.40 மணியளவில் பல்லடம் தாலுக்கா அலுவலகத்தின் எதிர்புறத்தில் உள்ள National Driving School அருகில் நானும், அ.சா.6 நந்தகுமாரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது Driving School படிக்கட்டில் 3 நபர்கள் உட்கார்ந்து கொண்டும், 3 பேர் நின்றுகொண்டும் ஆமினி வேனில் வந்து நிறுத்திவிட்டு பேசிக்கொண்டிருந்தார்கள். ஆமினி வேனிற்கு முன்புறம் அ.சா.6 நந்தகுமாரின் பல்சர் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு பேசிக்கொண்டிருந்தோம். அப்போது பல்லடம்– பொள்ளாச்சி ரோட்டில் பல்லடத்திலிருந்து பொள்ளாச்சி நோக்கி சென்ற ஈச்சர் லாரி அதிவேகமாக ராங் ரூட்டில் வந்து பல்சர் வண்டியை மோதி, ஆமினி வேனில் மோதிவிட்டு, படிக்காட்டில் உட்கார்ந்து இருந்த செல்வராஜ், ராஜம்மாள், அமிர்தசெல்வி ஆகியோர்கள் மீது மோதி, ஈச்சர் லாரி கவிழ்ந்துவிட்டது. பிறகு அடிப்பட்ட மூவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். சம்பவத்தின்போது விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியை ஓட்டிவந்தவரை பார்த்தேன். ஆஜர் எதிரி தான் சம்பவத்தின்போது விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியை ஓட்டிவந்த நபர் ஆவார். இது சம்மந்தமாக காவல் துணைகண்காணிப்பாளர் என்னை விசாரித்தார். நான் நடந்த

விபரங்களை சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்காக போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

| |
|---|
| சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.<br><br>ஓம்/–கே.சித்ரா,<br>நீதித்துறை நடுவர்,<br>பல்லடம். |

## வாக்குமூலம்

## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

## வழக்கு எண் : CC 1 of 2023

## வழக்கு சாட்சி – PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.நந்தகுமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து | தொழில் | : | டிரைவர் |
| கிராமம் | : | வடுகபாளையம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பல்லடம் | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 01.02.2024.
(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை: நாள்: 01.02.2024

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்துக் கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். சம்பவ காலத்தில் பல்லடம் National Driving School ல் வேலை செய்து வந்தேன். கடந்த 18.09.2022 ஆம் தேதி மதியம் 2.40 மணியளவில் பல்லடம் தாலுக்கா அலுவலகத்திற்கு எதிர்புறத்தில் உள்ள நான் வேலை செய்யும் National Driving School க்கு முன்புறமாக நானும், எனது நண்பர் சந்துருவும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது TN 42 AD 4905 என்ற பல்சர் வண்டியை நிறுத்திவிட்டு பேசிக்கொண்டிருந்தேன். அப்போது பல்லடம்–பொள்ளாச்சி ரோட்டில் ஒரு ஈச்சர் லாரி ஒன்று வடக்கிலிருந்து தெற்கு நோக்கி அதிவேகமாக வந்தது. Driving School படிக்கட்டில் ஆமினி வேனில் வந்து ஆமினி வேனை அங்கு நிறுத்திவிட்டு 6 நபர்களில் 3 நபர்கள் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டும், 3 பேர் நின்றுகொண்டும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

2. அந்த அதிவேகமாக வந்த ஈச்சர் லாரி நான் நிறுத்தி இருந்த எனது பல்சர் இருசக்கர வாகனத்தையும் மோதி தள்ளிவிட்டுவிட்டு, படிக்கட்டில் உட்கார்ந்து இருந்தவர்கள் மீது மோதி, பின்னர் ஆமினி வேன் மீது மோதியத்தில் ஆமினி வேன் கவிழ்ந்துவிட்டது. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த லாரி ராங் சைடில் வந்து படிக்காட்டில் உட்கார்ந்து இருந்தவர்கள் மீது மோதியது. கேட்டு விசாரித்ததில்

செல்வராஜ், அமிர்தசெல்வி, ராஜம்மாள் ஆகியோகளுக்குவிபத்தில் காயம் ஏற்பட்டதாக சொன்னார்கள். அவர்கள் மூன்று பேரையும் அங்கிருந்தவர்கள் உதவியுடன் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். பின்னிட்டு இரண்டு பேர் விபத்தில் காயம்பட்டவர்கள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியின் பதிவு எண்.7984 ஆகும். விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியின் ஓட்டுநரை சம்பவத்தின்போது பார்த்தேன். அவர் பெயர் பட்டீஸ்வரன். ஆஜர் எதிரி தான் சம்பவத்தின்போது விபத்தை ஏற்படுத்திய ஈச்சர் லாரியை ஓட்டிவந்தவர் ஆவார். இது சம்மந்தமாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

3. எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணைக்காக போதிய வாய்ப்பு அளித்தும் குறுக்குவிசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடித்துவைக்கப்படுகிறது.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஓம்/–கே.சித்ரா,
நீதித்துறை நடுவர்,
பல்லடம்.